රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන
தொலைபேசி:**(94) 011- 2694560**
Telephone

ෆැක්ස්
தொலைநகல்:**(94) 011- 2692254**
Fax

ඊ-මේල්
மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk**
E-mail

වෙබ් අඩවිය
இணையத்தளம்: **www.pubad.gov.lk**
Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: PS/GT/2020 (IV වෙළුම)

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி: / Date: 2022.05.05

அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள்/மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>வேலையற்ற பட்டதாரிகளுக்கு/டிப்ளோமாதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் - 2020</u>**

மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்திற்கு இணங்க இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் செயற்பாடுகள் தற்போது பூர்த்தியடைந்து வருகின்றன. பல்வேறு சிக்கல்களின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் மாகாணப் பட்டியல்களில் உள்ளடக்கப்பட வேண்டியுள்ள பெயர்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் அனைத்தும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

02. அதற்கிணங்க, இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு 2022.01.03 மற்றும் 2022.04.01 ஆம் திகதிககளைக் கொண்டதாக நியமனம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் பின்வரும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

I. இணைந்த சேவைக்கான நிரந்த நியமனத் திகதியாக மேற்குறித்த திகதிகளைக் கருதி நியமிக்கப்பட்ட அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 2022.05.09 ஆம் திகதியில் உள்ளவாறான, இணைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்களில் கடமையைப் பொறுப்பேற்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு கடமையைப் பொறுப்பேற்கத் தவறும் உத்தியோகத்தர்களின் நியமனங்கள் நடைமுறைக்கு வரும் திகதி தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானம் அந்த உத்தியோகத்தர்களின் சேவை மூப்பில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

II. மாகாண சபைகளினால் இது வரையில் நியமனம் வழங்கப்படாத அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தவிர வேறு எந்தவொரு பயிலுநரும் 2022.05.09 ஆம் திகதியில் பயிலுநர் கொடுப்பனவைப் பெறும் நிலையில் இருக்கக்கூடாது. அதற்கிணங்க, இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நிரந்தரமாக நியமனம் பெறவுள்ள பயிலுநர்களுக்கு ரூபா 20000/= கொடுப்பனவு ஏப்ரல் மாதத்திற்கு மட்டுமே வழங்கப்படும்.

III. எவ்வாறாயினும், மாகாண சபைகளில்/மாகாணப் பாடசாலைகளில் நியமனத்தை எதிர்பார்த்துள்ள பட்டதாரிப் பயிலுநர்களைப் பொறுத்தவரையில், உரிய மாகாண சபைகளின்

கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து மே மாதத்திற்கு மாத்திரம் பயிலுநர் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக நிதி ஏற்பாடுகளை வழங்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

IV. மேற்குறித்த ஆட்சேர்ப்புகான முறையான நேர்முகப் பரீட்சைகள் பிரதேச செயலாளர்களாலேயே நடாத்தப்பட்டன. அது தொடர்பில் நீண்ட அறிவுறுத்தல் தொகுதியொன்று என்னால் வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க பெரும்பாலும் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், சில காரணங்களினால் (விண்ணப்பதாரர்கள் உண்மையான தகவல்களைச் சமர்ப்பிக்காமை, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றமை போன்றவற்றின் காரணமாக) அடிப்படைத் தகைமைகள் காணப்படாது பயிற்சி பெறும் ஒரு தொகைப் பயிலுநர்கள் உள்ளனர். அவர்கள் பெரும்பாலும் அடையாளம் காணப்பட்டு பயிற்சியை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும், பல்வேறு காரணங்களினால் அத்தகைய பயிலுநர்கள் தொடர்ந்தும் பயிலுநர்கள் அடிப்படையில் கொடுப்பனவுகளைப் பெற்று பயிற்சியில் இருப்பதையும், சிலபோது நிரந்தர நியமனம் பெறுவதையும் அனுமதிக்க முடியாது. அதற்கிணங்க, அத்தகைய பயிலுநர்களை அல்லது நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய உத்தியோகத்தர்களை, அந்தப் பயிற்சி நியமனக் கடிதங்களை/ நிரந்தர நியமனக் கடிதங்களை இரத்துச் செய்வதற்காக என்னிடம் அனுப்புவதற்கு உரிய நிறுவனத் தலைர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பான ஏற்பாடுகள் இந்த ஆட்சேர்ப்புடன் தொடர்புடையதாக என்னால் வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனக் கடிதத்தின் 22 ஆம் பந்தியிலும், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட பயிற்சி நியமனக் கடிதத்தின் 08 ஆம் பந்தியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

- இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படாத முதல் பட்டங்களைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் காணப்படவில்லை. அதனால், என்னால் 2020.08.24 ஆம் திகதி வழங்கப்பட் நேர்முகப் பரீட்சை அறிவுறுத்தல்களுக்கு இணங்க வெளிநாட்டுப் பட்டங்கள், நியமனங்களுகக்கு ஏற்புடையதாகாது.

- மேலும், 2020.09.15 ஆம் திகதியில் வேலையற்றவர்களாக இருந்திராத பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் காணப்படவில்லை என்பதை இதன் போது கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

03. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கான/ மாகாணப் பாடசாலைகளுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை வழங்கும் செயன்முறைகள் தொடர்பான நடவடிக்கைகளை இந்த மாதத்தில் செய்து முடிப்பதற்கு மாகாண சபைகள் நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதாகும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு